ஆகியோருக்கு இப்போது பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. சுப்புசேஷ ஐயர் அனுபவித்து வந்ததை விற்றுவிட்டுப் போய்விட்டார். ஆகவே, அதில் நடவடிக்கை இப்போது தேவை இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அந்தத் தியாகிகளுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்கள் அவற்றை உழுதுகொண்டிருக்கிறவர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டதாகத் தெரிவித்தார்கள். இந்தத் தியாகிகளின் வாரிசுகள் யாராவது இதற்கு ஆட்சேபணை தெரிவித்தார்களா? அப்படி ஏதாவது ஆட்சேபணை தெரிவித்திருந்தால் அவற்றின் மீது அரசாங்கம் ஏதாவது நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : யாரும் அவைபற்றி மனுக்கள் செய்யவில்லை. ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை.

திருக்கடையூர்-தரங்கம்பாடி இணைப்புச்சாலை

*** 536 வினா—திரு. டி. வி. சம்பத் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கடையூரிலிருந்து வேப்பஞ்சேரி, தாழம்பேட்டை, மாணிக்கப் பங்கு வழியாக தரங்கம்பாடிக்கு இணைப்புச்சாலை ஒன்று அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கும்?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். கணேசன் : இந்த சாலை விஷயம் அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகிறது. எனவே நடப்பாண்டிலாவது சிறப்பு நிதி உதவி செய்து இந்த இணைப்புச் சாலையை திட்டத்தில் சேர்த்து அந்தப் பகுதியில் சாலையை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : உறுப்பினர் அவர்கள் சொல்வது முழுதும் உண்மை. அது மக்களுக்குப் பயன்படும் சாலைதான். நான்கு மதகுகளும் ஒரு சிறிய பாலமும் கட்டவேண்டியிருக்கிறது. அதற்கு ரூ. 13 லட்சத்திற்கு மேல் செலவாகும் நிலை இருப்பதால் அந்த வேலையை இந்த ஆண்டில் செய்து முடிக்கமுடியாது.

1975 ஏப்ரல் 2]

ஆரணியாற்றின் குறுக்கே தரைப்பாலம்

* 537 வினு—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் 22—1—1974 அன்று வினு எண் 80-க்கு அளித்த விடையையொட்டி, தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி வட்டம், ஆரணியாற்றின் குறுக்கே, புதுப்பாளையம் கிராமத்தையும், புதுவாயல்—பெரியபாளையம் நெடுஞ்சாலையையும் இணைக்கும் தரைப்பாலம் கட்டும் வேலை இன்னும் தாமதமாவதேன்?

(இ) இதை விரைந்து முடிக்க மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) இவ்வேலைக்கான விரிவான தொழில் நுட்ப ஆய்வு செய்து பிறகு மதிப்பீடு தயார் செய்யப் பட்டு, பின்பு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, ஒப்பந்தப் புள்ளிக்காரருக்கு வேலை ஒப்படைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டு, அவர் ஒப்பந்தத்தில் 17—2—75-ம் நாள் கையொப்பமிட்டார்.

(இ) இவ்வேலை 1975—76 ஆம் ஆண்டில் எடுத்துச் செயலாக்கப்படும்.

பெரியபாளையம்-மேல்மளிகைப்பட்டு சாலை

* 538 வினு—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

எல்லாபுரம் ஒன்றியத்தில் பெரியபாளையத்திற்கும், மேல்மளிகைப் பட்டுக்கும் இடையே சாலை அமைப்பதற்கான நில ஆர்ஜிதப் பணி எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: எல்லாபுரம் ஒன்றியத்தில் பெரியபாளையத்திற்கும் மேல்மளிகைப்பட்டுக்கும் இடையே சாலை அமைப்ப தற்கான நில உரிமைப்படுத்தல் பணியை விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

Road works under Vyasarpadi Housing Scheme

* 539 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour pleased to state—

(*a*) whether any irregularities in a contract and execution of road works by the Tamil Nadu State Housing Board, Vyasarpadi Sub-Division, have been detected by the Government recently;

(b) if so, the details thereof; and

(c) the steps taken by the Government in this regard?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) & (உ): வியாசர்பாடியில் வடசென்னை புறநகர் திட்டத்தின்கீழ் சாலை அமைக்க, சம்பந்தப்பட்ட உதவிப் பொறியாளரும், பிரிவு அலுவலரும் ஏற்கனவேயுள்ள ஒப்பந்தத்தின்படி ஒப்பந்ததாரரே அமைக்கவேண்டிய 12 அடி அகலத்திற்குப் பதிலாக 18 அடி அகல சாலையை அமைக்கவும், அதிகப் படியான அகலத்திற்கான பணத்தை வேறு ஒரு ஒப்பந்தக்காரர் மூலம் பெறவும் அனுமதியளித்துள்ளனர் என்பது குற்றச்சாட்டு. இக் குற்றச்சாட்டு புலனாய்வில் இருக்கிறது. சம்பந்தப்பட்ட உதவிப் பொறியாளரும், பிரிவு அலுவலரும் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

முளப்பாக்கம் வீட்டுவசதித் திட்டம்

*** 540 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் பணியாளர்களுக்காக மாயூரம் தாலுக்கா முளப்பாக்கத்தில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித்தரும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(இ) அத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(உ) எவ்வளவு வீடுகள் கட்டித் தரப்படும்?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) அரசுப் பணியாளர்களுக்காக மாயூரம் தாலுக்கா முளப்பாக்கம் கிராமத்தின் அருகிலுள்ள மன்னம்பந்தல் என்னுமிடத்தில் வீட்டு வசதி வாரியத்தினால் எடுக்கப்பட்டுள்ள வாடகை குடியிருப்புகள் கட்டும் வேலை கட்டிடத்தளம் வரை வந்துள்ளது.

(இ) ரூ. 12.80 லட்சம்.

(உ) 72 குடியிருப்புகள்.

திரு. என். கிட்டப்பா: இந்தக் குடியிருப்புகளை மேலும் அதிகமாக்கித் தர ஏதாவது கோரிக்கை கொடுத்துள்ளார்களா? அதுபற்றிப் பரிசீலனை செய்யப் பட்டுள்ளதா?